**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) SC.15/2024
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
( Court

| | | | |
|---|---|---|---|
| Name | காஜேந்திர குமார் | -- | |
| Father's Name | சக்திவேல் | Calling | கூலி |
| Village | சேத்தூர் | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையம் தாலுகா சேத்தூர் அம்மன் சன்னதி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தேங்காய் வெட்டும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி ஈஸ்வரனும் என்னுடன் தேங்காய் வெட்டும் வேலை செய்து வருகிறார். அசா 1 என்னுடைய மனைவி. என்னுடைய மனைவி தையல் வேலை செய்து வருகிறார். நானும் ஆஜர் எதிரியும் மது அருந்துவது வழக்கம். அடிக்கடி மது வாங்கி கொடுப்பது சம்பந்தமாக எனக்கும் ஆஜர்எதிரிக்கும் வாய்தகராறு ஏற்படும். ஆஜர் எதிரிக்கு நான் மது வாங்கி கொடுத்தால் சமாதானம் ஆகிவிடுவார். கடந்த 07.03.2023 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும் எனது மனைவியும் மேட்டுப்பட்டியில் ஒரு நிகழ்ச்சிக்கு செல்வதற்காக கண்ணன் நகை கடை அருகில் கிழக்காக சென்றுக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்து எனது சட்டையை பிடித்து மது அருந்துவதற்காக பணம் கேட்டார். நான் பணம் இல்லை என்றவுடன் அவர் சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து தேவடியாக மகனே இதோடு செத்து தொலைடா என்று சொல்லி அரிவாளால் எனது கழுத்தை நோக்கி வெட்டும்போது நான் சாய்ந்துக்கொண்டு வலது கையால் தடுத்தபோது எனது வலது கை மணிக்கட்டிலும் தலையின் வலது பகுதியிலும் காயம் ஏற்பட்டது. நான் கிழே விழுந்துவிட்டேன். நான் கிழே விழுந்தபிறகும் எனது தலையில் அரிவாளால் மாறி மாறி வெட்டினார். இந்த சம்பவத்தை எனது மச்சான் கார்த்தி, சிவகணேசன் அவர்கள் சம்பவத்தை பார்த்து சத்தம் போட்டவுடன் எதிரி அரிவாளுடன் கிழக்காமல் சென்றுவிட்டார். காயப்பட்ட என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். ஆம்புலன்சில் எனது மனைவி, மைத்துனர் கனகராஜ் மற்றும் காளிராஜ் ஆகியோர் வந்தார்கள். நான் அரசு மருத்துவமனையில் மயக்க

நிலையில் இருந்ததால் அங்கு வந்த போலீசாரிடம் எனது மனைவி புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேல் சிகிச்சைக்காக என்னை திருநெல்வேலி அல்லது மதுரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்படி அரசு மருத்துவர் கூறியதால் எனது மனைவி என்னை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மதுரையிலுள்ள ப்ரித்தி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். ஆஜர் எதிரி என்னை வெட்டுவதற்கு பயன்படுத்திய அரிவாளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் சாபொ1 அரிவாள்தான் ஆஜர் எதிரி பயன்படுத்தியதாகும். ப்ரித்தி மருத்துவமனையில் சுமார் 38 நாட்களாக சிகிச்சை மேற்கொண்டு வந்தேன். ஆஜர் எதிரி என்னை வெட்டியதன் காரணமாக தற்போதும் எனது வலது கையில் நான்கு விரல்கள் செயலிழந்து விட்டது. வலது கை மணிக்கட்டு துண்டாகி இருந்ததால் எனது தொடை பகுதியிலிருந்து சதை எடுத்து வலது கை மணிக்கட்டில் அறுவை சிகிச்சை மேற்கொண்டார்கள். அதனால் வலது கை மணிக்கட்டு பகுதியில் வீக்கம் போன்ற பகுதி தற்போதும் உள்ளது. எதிரி என்னை தலையில் வெட்டியதால் எனக்கு மண்டையிலுள்ள எலும்புகளும் உடைந்திருந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of February 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**